# திருக்காவலூர்க் கலம்பகத்தில் மரியன்னையின் சிறப்புகள்

**முனைவர் தே. ராஜசீலி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
ஜெ.அ.மகளிர் கல்லூரி (தன்னாட்சி), பெரியகுளம்

**மலர்:** 3

**சிறப்பிதழ்:** 4

**மாதம்:** மார்ச்

**வருடம்:** 2019

**ISSN:** 2454-3993

**முன்னுரை**

வீரமாமுனிவர் இத்தாலி நாட்டிலிருந்து தமிழகம் வந்த தன் தலையாய நோக்கம் சமயம் பரப்பவே. ஆயினும் அப்பணியில் மட்டுமே வீரமாமுனிவர் அமைதி காணவில்லை. சமுதாயப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். தம் சமயத்தினருக்கு மட்டுமின்றி அனைத்து மக்களுக்கு பயன்படும் வகையில் பல நூல்களைப் படைத்துள்ளார். அவற்றில சிறந்தது திருக்காவலூர்க் கலம்பகம் ஆகும். **"அன்னையின் சிறப்பையும் இயேசுவின் பெருமைகளையும் நாம் தெரிந்து கொண்டு வேதநெறி ஒழுகி மோட்சம் பெறுவதற்கு உதவியாக இந்நூல் விளங்குகிறது."** இதில் வீரமாமுனிவர் மரியன்னைக்கு எவ்வாறு சிறப்பிடம் கொடுத்துள்ளார் என்பதைப் பற்றி இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**யூதப்பெண் கன்னி மரியாள்**

சுவக்கீனும் அன்னாளும் இன்பமாக வாழ்ந்து வந்தாலும் அவர்கள் வாழ்வில் ஒருபெருங்குறை இருந்தது. செல்வம் அனைத்தும் இருந்தாலும் பிள்ளைச் செல்வம் இல்லை என்றால் அது ஒரு பெருங்குறையே ஆகும். கணவனுக்கும் மனைவிக்கும் குழந்தை இல்லை என்றால் அது "கடவுள் தந்த சாபம்" என யூத மக்கள் கூறி வந்தார்கள். அதனால் சுவக்கினும் அன்னாளும் குழந்தை வேண்டித் தவம் இருந்து வந்தார்கள் இருபது ஆண்டுகள் கழித்து மரியாள் பிறந்தாள். அதனால் அவர்கள் மரியாவைப் பாசத்துடன் வளர்த்தார்கள். தங்களுக்கு கிடைத்த செல்வமாகவும் கருதினார்கள். கூடவே பக்தியையும் போதிக்க மறக்கவில்லை. மரியாளும் அதற்கேற்ற தூய மனம், அறிவு, ஆற்றல், அருள், தெளிவு, சிறந்த துணிவு, ஆய்வுத்திறன் பெற்று விளங்கினார். இவர் இறைவனின் அன்புக்கு உகந்தவராகவும் விளங்கினார். யூத வழக்கப்படி மரியாள் மூன்று வயதிலேயே ஆலயத்தை அடைந்து அன்று முதல் தன் 12 வயது வரை அங்கு விருப்பமாகப் பணி செய்து வந்தாள். தன் மூன்று வயதில் கன்னிமை விரதம் பூண்டதால் விண்ணவர் மகளிரைப் போன்று விளங்கினார். மண்ணிலும் மற்ற பெண்களைக் காட்டிலும் அழகுடனும், பொறுமையுடனும், தூய மனத்துடனும் விளங்கியதால் கடவுளுக்குப் பிடித்தவராகவும், பெண்களுக்கெல்லாம் முன் மாதிரியாகவும் விளங்கினார். 'கடவுள் மனித உருவம் எடுப்பதற்காக இவ்வுலகில் மாசில்லாத பெண் மரியாளைத் தேர்ந்தெடுத்தார்' என விவிலியம் கூறுகின்றது. கடவுளால் தேர்ந்தெடுக்கப்படும் அளவிற்குத் தீங்கில்லாதக் கன்னியாக மரியாள் விளங்குகிறார்.





**மரியாள் அழகு**

தேம்பாவணியில் மரியாள் பாயிரத்தில் தான் அறிமுகம் செய்யப்படுகிறாள். பாயிரத்தல் அவர் 'ஆகிர்த மரியாள்' என அழைக்கப்படுகிறாள். மரியாளின் அழகினைச் சொல்ல இவ்வுலகில் ஈடுஇணை எதுவும் இல்லை. உலகிற்கே ஒளிதரும் சூரியனைத் தன் மேனியில் ஆடையாக அணிந்தவராகவும், குளிர்ந்த ஒளி தரும் வெண்ணிலாவைத் தன் பாதத்தில் காலணியாகப் பூண்டவராகவும், தெளிந்த ஒளி தரும் பன்னிரெண்டு விண்மீன்களைத் தன் தலை முடியில் சூடியவராகவும் மரியாள் திகழ்கிறார். இதனை,

**"விளங்கு ஒளி உடுத்த மேனி வெண்மதி மிதித்தபாதம்**
**உளங்குஉடு சூட்டும் உடையவள் பரம தாயே"**

என்னும் வரிகள் சுட்டுகின்றன. மேலும் முத்துப் போன்ற பற்களும், மீன் போன்ற கண்களும், பவளம் போன்ற உதடும், கிளி போன்ற பேச்சும், கனிபோன்ற சொல்லும், ஒளி பொருந்திய நெற்றியும், வில் போன்ற புருவமும், மேகம் போன்ற பாதமும் கொண்ட மரியாளின் அழகினை,

**"புல்லும் விழியும் பவளத்து இதழும்**
**சொல்லும் கனிஅம் சொலும் ஒள் நுதல்கொள்**
**வில்லும் கரமும் விளிசிறு அடியும்**
**செல்லும் திசை செல் உறழ் செல் அருளே"**

என்னும் இவ்வரிகள் உணர்த்துகின்றன. கதிரவனின் ஒளியை மறைக்கும் இவரின் கண்களை கூர்ந்து பார்த்தால் காமம் தோற்றுவிடும் என்றும், அழிந்து விடும் என்றும், பார்க்காமல் தன் கண்களை மூடினால் அச்சமும், கலக்கமும் ஏற்படும் என்றும் விழித்துப் பார்த்தால் மோட்சத்தற்குப் பரம கதியைக் காட்டும் என்றும் மரியாளின் கண்களின் அழகினை தேம்பாவணி கூறுகிறது.

**திருக்காவலூர்க் கலம்பகத்தில் மரியன்னையின் சிறப்பு**

**கலம்பகத் தலைவி**

வீரமாமுனிவர் இயற்றிய திருக்காவலூர்க் கலம்பகத்தில் மரியன்னையை கலம்பகத் தலைவியாக காணப்படுகிறாள். கலம்பகத்தில் தலைமை மாந்தர்களைக் குறிப்பிடும் போது அவர்களுடைய பண்பு, கொடை, வீரம் போன்ற சிறப்புகளைக் குறிப்பிடுவது வழக்கம் ஆகும். திருக்காவலூர்க் கலம்பகத்தில் மரியன்னையே கலம்பகத் தலைவி ஆவாள். அக்கலம்பகத் தலைவிக்கு அடைக்கல அன்னை என்று பெயர் சூட்டி மகிழ்கின்றார். "இறைவனுக்கும் பிற உயிர்களுக்கும் அடைக்கலம் தரும் பண்பினைப் பெற்றதால் அடைக்கல மாதா என்று அழைக்கப்படுகிறாள்."[5] இதனை,

**"உயிராந் தயையாளை யோம் பணந்தத் தாளை**
**யுயிரா மறைமொழி யாளை – பயிராருந்**
**சிந்துசேர் காவலூர் சேர்ந்தாளைப் பாடினே**
**னிந்துசேர் தாட்சேர யான்"**

என்ற பாடலில் மக்களுக்கு உயிருக்கு உயிராகக் கிருபை மிகுந்தவளைப் பாதுகாக்கின்ற முடிவில்லாதவளை, ஐயத்திற்கு இடமற்ற வேகத்தை உடையவளே பயிர்கள் நிறைந்த காவிரியின் கிளை ஆறாகிய கொள்ளிடத்தின் வடகரையில் அமையப்பெற்ற திருக்காவலூரில் நிறைகொண்ட அடைக்கல அன்னையை நிலா தஞ்சம் புகுந்த திருவடிகளை அடைவதற்கு அடியவனாகிய நான் பாடித் தொழுதேன் என்கின்றார் வீரமாமுனிவர்.

**மரியன்னையின் பண்புகள்**

திருக்காவலூரில் மரியன்னைக்குத் திருவிழா எடுத்துச் சிறப்பித்த வீரமாமுனிவர் கலம்பகம் முழுவதிலும் அன்னையின் பல்வேறு பண்புகளைச் சிறப்பித்துப் பாடுகிறார். தனது புகழ்ச்சி மொழிகளையும் வெளிப்படுத்துகிறார்.

**"அடைக்கலம் அருளும் இரக்கத்தின் திருவுறு'**

**....................................**

**'வெற்றிச் சிங்கமான கடவுளை ஈன்ற முழுப்பொருள்'**
**'வேத நூல்களை உணர்ந்தவள், உணர்த்தியவள்"**

### மரியன்னையின் தோற்ற வருணனை

அடைக்கல அன்னை பிறந்ததிலிருந்தே இறைப்பண்பினைப் பெற்றவள் எனக் காட்டுவதற்கு அவளது புறத்தோற்றமே ஒரு சான்றாக அமைகிறது. விவிலியத்தில் "வானில் பெரியதோர் அடையாளம் தோன்றியது பெண் ஒருவர் காணப்பட்டார். அவர் கதிரவனையே ஆடையாக அணிந்திருந்தார். நிலா அவருடைய காலடியில் இருந்தது. அவர் பன்னிரு விண்மீன்களைத் தலைமீது சூடியிருந்தார் என்று கூறுகிறது." மேலும் இவள் ஒரு தேவதாய் என்றும் கூறுகிறார். வீரமாமுனிவரே அன்னையின் அழகுத் தோற்றத்தினை,

**"மீனே தலையரும்ப வெண்மதியே தாளரும்ப**
**பானே உடலரும்ப பாங்கு ருவை"**

என்று அன்னையின் தோற்றத்தினை நமக்கு சிறப்பாக வருணிக்கின்றார்.

### அடைக்கல நாயகிக்குப் புகழ்மாலை

அடைக்கல அன்னையை அழைக்கும்போது 'சேண் மலரே' என்று புகழ்கின்றார். சேண் மலரே என்பது விவிலியத்தில் இருந்து பெறப்பட்டதாகும். திருச்சபையினர் அன்னையிடம் வேண்டும் போது 'தேவ ரகசியத்தைக் கொண்டிருக்கிற ரோசா மலரே' என்று தேவ அன்னையைப் போற்றுவர். "சாரோன் சமவெளியில் உள்ள காட்டு மலர் நான் பள்ளத்தாக்குகளில் காணும் லீலி மலர்" என்று அன்னையைப் புகழ்கின்றார்.

### தேவமகனைத் திருவயிற்றில் தாங்கியவள்

மூவுலகங்களையும் படைத்த இறைமகன் இயேசு கிறிஸ்து வாழ்வோர்க்கு வழிகாட்டியாகவும் இறந்தோருக்கு நிலையான பேரின்ப வாழ்வளிப்பவராகவும் போற்றப்படுகிறார் வானதூதர் மரியாளுக்குத் தோன்றி "இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் மேன்மை மிக்கவராய் இருப்பார்." என அமைந்த நற்செய்திக்கு ஏற்ப தனது திருவயிற்றில் தெய்வ மகனைக் கருத்தாங்கினாள். இதனை,

**"கடைந்த மணியணி கடந்த வடிவொளி**
**கலந்த வருவோடு நீபயந் தடைந்த."**

என்ற வரிகளில் திருக்காவலூரை நெருங்கிய அருளாகிய மரியன்னையே! பட்டை தீட்டப்பட்ட ஒன்பது வகை மணிகளின் அழகையும் வென்று அழகும் ஒளியும் சேர்ந்த உருவத்துடன் நீ இறைமகன் இயேசுவை பெற்றெடுத்தாய் என்று அன்னையை உயர்வாகப் புகழ்கின்றார்.

### இறைவனையே ஏவல் கொண்டவள்

மண்ணுலகத்தில உயிர்கள் தோன்றுவது இயற்கை ஆகும். ஆனாலும் மூவுலகை ஆளும் இறைவனே மனிதகுலத்தில் பிறத்தாலும் பெற்ற அன்னைக்கு அவன் ஒரு மகன் தானே எனவே தனக்குப் பணிவிடை செய்யுமாறு கட்டளையிடும் தகுதி மரியாளுக்கு உள்ளது. அதனைப்போல் தான் மரியாளும் தனக்குப் பணவிடை செய்யுமாறு கூறினார்.

**"பின்பு அவர்(இயேசு) அவர்களுடன் (மரியம்மை, சூசையப்பர்) சென்று நாசரேத்தை அடைந்து அவர்களுக்கு பண்ந்து நடந்தார்."**

மேலும் தன் தாயின் சொல்லுக்கு இயேசு எப்போதும் செவி கொடுத்து நடப்பார். இதற்குச் சான்றாக விவிலியத்தில் யோவான் இரண்டாம் (2) அதிகாரத்தில் கூறப்படும் நிகழ்ச்சியைக் காண்போம்.

கானாவூரில் திருமணம் நடைபெறும் போது அங்குத் திராட்சை ரசம் தீர்ந்து போகவே உடனே மாயாள் இயேசுவை நோக்கி ரசம் தீர்ந்து விட்டது என்றாள். பணியாளிடம் அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள் எள்றார். அதே போல் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றப்பட்டது. ஆத்தண்ணீரை நல்ல திராட்சை இரசமாக மாற்றினார். இந்நிகழ்ச்சியினை வீரமாமுனிவர் கருத்தில் கொண்டு,

**"அனைத்துலகு மேவலைக் கொண்ட சைத்தனி யானையினா**
**அனைத்துலகும் வியப்புறவிந் நிலத்தேவல் கொண்டனைந்தா."**





என்ற பாடல் வரிகளில் எல்லா உலகங்களும் தன்னுடைய கட்டளையை ஏற்றுக் கொண்டு இயங்குமாறு அவைகளை இயக்கிய ஒப்பற்ற ஆணைச் சக்கரத்தை உடைய இறைவனையே இவ்வுலகத்து மாந்தர்களும் எண்ணி வியந்து நிற்குமாறு மரியே உனக்குப் பணி செய்யுமாறு செய்தாய் என்று வீரமாமுனிவர் கூறுகிறார்..

### நற்கனி தரும் மரம் போன்றவள்

ஒரு பொருளின் சிறப்பைக் காட்டுவது எது என்றால் அதன் பயனாகும். அதே போல் ஒரு மரத்தின் சிறப்பு அதனுடைய பூவும் காயும் கனியுமாகும். இதற்குச் சான்றாக விவிலியம் "நல்ல மரவெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்." என்கிறது. அதே போல் "ஒவ்வொரு மரத்தையும் அறிவது அதன்தன் கனியாலே." என்று கூறுகின்றது. இவ்விவிலியக் கருத்து அடைக்கல நாயகிக்குப் பொருந்துகிறது. எவ்வாறெனில்

**"காயென பூவென தந்தரு மாட்சியைக் காட்டுவதுபோற்**
**சேயுனைக் காட்டலின் இவ்வனவும் புகழ் செப்புவரா."**

என்ற பாடலில் விண்ணையும், மண்ணையும் அவற்றில் உள்ள அனைத்தையும் உண்டாக்கிய இறைவனாகிய தந்தை உன்னை அன்னையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டான். அத்தகையவன் காயும், பூவும் தங்களது மரத்தின் பெருமையைக் காட்டுவது பேர்ல மகளாயும் உன்னை உலகத்தாருக்கு காட்டுவது போல மகளாயும் உன்னை உலகத்தாருக்கு காட்டுவது போல இவ்வளவு உனது புகழை அளவிட்டுச் சொல்லக் கூடியவர்கள் யாரோ? என்று வீரமாமுனிவர் சிறப்பித்துக் கூறுகின்றார்.

### அனைத்துலக அன்னையவள்

இயேசு பெருமானின் சிலுவை அடியின் இறுதிவரை தொடர்ந்தவர்களுள் அவரின் தாயும் இயேசுவின் சீடருமான யோவோனும் சிறப்பாகக் குறிப்பர். இயேசு பெருமான் சிலுவை மரத்தில் உயிர்விடும் முன்பு யோவானை நோக்கி 'இவரே உம் தாய்' என்று கூறினார். இதன் மூலம் உலகத்திற்கே தாயாக தந்தருளிய அன்னையை,

**"வீதி மந்திர நூலியே யாதிதந்திர வேலியே**
**வென்றி தந்தமடங்கலே நன்றி தந்தவ டங்கலே"**

என்ற வரிகளின் மூலமாக 'நன்றி தந்த அடங்கள்' என்று பெருமைப்படுத்திக் கூறுகின்றார் வீரமாமுனிவர்.

### முடிவுரை

வீரமாமுனிவர் திருக்காவலூர்க் கலம்பகத்தில் மரியன்னையின் சிறப்புகளை எடுத்துரைக்கப்படுகின்றார். இதில் மரியன்னையுடைய பண்புகள், சிறப்புகள், நற்கனி தரும் மரம், இறைவனை ஏவல் கொண்டவள், திருமகனைத் தாங்கியவள், அனைத்துலக அன்னை என்று மரியன்னையின் சிறப்புகள் தெள்ளத்தெளிவாக இப்பகுதியில் காட்டப்பட்டுள்ளது.